# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 186 /மா/2023**

**நாள்: 03.10.2023**

திரு.V.P. ரவிச்சந்திரன்
திருப்பூர். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

திருப்பூர், பாளையக்காடு, ஆகாஷ் இல்லம், எண்.4சி என்கிற முகவரியில் வசிக்கும் திரு.V.P. ரவிச்சந்திரன் என்பவரின் 12.06.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.06.2023–ல் பெறப்பட்டு 186/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருப்பூர், பாளையக்காடு, ஆகாஷ் இல்லம், எண்.4சி என்கிற முகவரியில் வசிக்கும் திரு.V.P. ரவிச்சந்திரன் என்பவர் தனது 12.06.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"தகவல் பெறும் உரிமைச் சட்டம் மூலமாக மாநகராட்சி வார்டு 43 பூச்சக்காடு இரண்டாவது வீதி மற்றும் குறுக்கு வீதிகளில் சாலை புதுப்பிக்கப்பட்டுள்ளது தொடர்பான தகவல்கள் கேட்கப்பட்டது. தகவல் ஆணைய உத்தரவிற்கு பின்பும் காலதாமதம் செய்து ந.க.எண்.இ1/3761/2020/ம4 நாள் 09.05.2023 கடிதத்துடன் தகவல்களை இணைத்து CT375203328IN பதிவு பார்சலை 06.06.2023 அன்று பதிவு செய்துள்ளார்கள். அதனை 07.06.2023 அன்று பெற்றுகொண்டேன். அதில் 1 முதல் 138 வரை பக்கங்கள் உள்ளதாக பொது தகவல் அலுவலர் சான்று அளித்துள்ளார்கள். பல வகைகளில் முறைகேடுகள் செய்துள்ளதால் தகவல்களை வழங்க காலதாமதம் செய்துள்ளார்கள். பொது தகவல் அலுவலர் அவர்கள் வழங்கிய 138 பக்கங்களை அப்படியே இந்த மனுவுடன் இணைத்து அனுப்புகிறேன்.

பக்கம் 1 முதல் 12 வரை உள்ள பக்கங்களில் மாநகராட்சி பொறியாளர் திரு.ஜி.ரவி, செயற்பொறியாளர் திரு.எஸ்.திருமுருகன், உதவி செயற்பொறியாளர் திரு.சி.கண்ணன் மற்றும் இளம்பொறியாளர் கௌரிசுந்தரன் ஆகியோர் சாலையை புதுப்பிப்பதற்கு 11 பணிகள் செய்ய திட்ட அறிக்கை தயாரித்து அனைத்து பணிகளையும் செய்ய ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி பணிகள் செய்யப்பட்டுள்ளதாக பணமும் வழங்கியுள்ளார்கள். அந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவின்படியும் மாநகராட்சி பொறியாளர்கள் வழங்கிய புகைப்படங்களின் படியும் நான்கு பணிகள் மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இந்த சாலை பணிகளை உடன் இருந்து கண்காணிக்கும் பொறுப்பில் உள்ள உதவி செயற்பொறியாளர் திரு.சி.கண்ணன் மற்றும் இளம் பொறியாளர் ஆர்.கௌரிசுந்தரன் ஆகியோர் பணி நடக்கும் இடங்களுக்கு வரவேயில்லை.

விதிமுறைகள்படி சாலைப்பணிகளுக்கு கொண்டு வரும் பொருள்களை தள பதிவு (site order book) புத்தகத்தில் பதிவு செய்ய வேண்டும் அதையும் செய்யவில்லை. பணம் வழங்கும் அளவு புத்தகமும் தளத்திலேயே பதிவு செய்ய வேண்டும் அதையும் செய்யவில்லை. விதிமுறைகள்படி சாலைப்பணிகள் முடிந்த பின்பு மூன்றாம் நிறுவனத்தின் மூலம் தர பரிசோதனை செய்து அறிக்கை பெற்றிருக்க வேண்டும் அதையும் பெறவில்லை. ஒவ்வொரு பணிக்கு முன்பும் பணி முடிந்த பின்பும் புகைபடம் எடுத்து வைக்க வேண்டும், அவ்வாறும் புகைப்படங்கள் எடுக்கப்படவில்லை. மாநகராட்சி பொறியாளர் திரு.ஜிரவி, செயற்பொறியாளர் திரு.எஸ்.திருமுருகன், உதவி செயற்பொறியாளர் திரு.சி.கண்ணன் மற்றும் இளம்பொறியாளர் கௌரிசுந்தரன் ஆகியோர் சாலை பணிகளுக்கு செய்ய வேண்டியதில்லாத பணிகளை செய்ய வேண்டும் என்று திட்டம் தயாரித்து பணிகளை செய்யாமல் செய்ததாக போலியாக ஆவணங்களை உருவாக்கி முறைகேடு செய்துள்ளார்கள்.

போலி ஆவணங்கள் தயார் செய்து முறைகேடு செய்த மாநகராட்சிப்பொறியாளர் திரு.ஜிரவி, செயற்பொறியாளர் திரு.எஸ்.திருமுருகன், உதவி செயற்பொறியாளர் திரு.சி.கண்ணன் மற்றும் இளம்பொறியாளர் கௌரிசுந்தரன் ஆகியோரை பணிநீக்கம் செய்ய உத்தரவிடுமாறும், முறைகேடு செய்த தொகையை அவர்களிடம் வசூல் செய்யவும் அவர்கள் மீது போலி ஆவணங்கள் தயாரித்த குற்றத்திற்காக இந்திய குற்றவியல் நடைமுறை சட்டத்தின்படி வழக்கு தொடர உத்தரவிடுமாறும் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2. இம்முறைமன்ற கடித நாள் 03.07.2023 வாயிலாக திருப்பூர் மாநகராட்சி ஆணையரிடம் இம்மனு மீது அறிக்கை கோரப்பட்டது.**

**3. திருப்பூர் மாநகராட்சி ஆணையர் தனது 26.07.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

"திருப்பூர் மாநகராட்சி வார்டு 49–க்குட்பட்ட எருக்காடு மற்றும் பூச்சக்காடு 2வது வீதி மற்றும் குறுக்கு வீதிகளில் தார் சாலை புதுப்பிக்கும் 11 பணிகளுக்கு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அனைத்துப்பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. அனைத்துப் பணிகளும் செய்து முடிக்கப்பட்டதற்கான புகைப்படங்கள் புகார்தாரருக்கு மாநகராட்சி கடிதம் ந.க.எண். இ1/3761/2020/டி4, நாள் 09.06.2023–ன்படி ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. சாலைப்பணிகள் நடைபெற்றபொழுது அதனை பொறியாளர்கள் அவ்வப்பொழுது ஆய்வு செய்து அளவீடு விபரங்களை அளவுப் புத்தகங்களில் தேதி வாரியாக பதிவு செய்து கையொப்பமிட்டுள்ளார்கள். சாலைப்பணிகளுக்கான பொருட்கள்

உடனுக்குடன் பரப்பப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளதால் Site order book–ல் பதிவு செய்யும் நிலை எழவில்லை எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

திட்ட அறிக்கையின்படியான கீழ்கண்ட 11 திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு கீழ்கண்ட அளவுப் புத்தகங்களில் உரிய அளவுகள் பதியப்பட்டு பணிகள் முழுமையாக செய்து முடிக்கப்பட்டுள்ளன.

| வ.எண். | சாலைப் பணிகள் விபரம் | | அளவுப் புத்தக விபரங்கள் |
|---|---|---|---|
| 1 | எருக்காடு 1 முதல் 5 வீதிகள் | 5 வேலைகள் | 1587/2019 – 2020<br>1600/2019 – 2020 |
| 2 | பூச்சக்காடு கிழமேல் வீதி | 1 வேலை | 1589/2019 – 2020 |
| | தென்வடல் வீதி | 1 வேலை | |
| | குறுக்கு வீதிகள் 1,2,3,4 | 4 வேலைகள் | |
| மொத்தம் | | 11 வேலைகள் | 1604/2019–2020 (ABSTRACT) |

இச்சாலைப்பணிகள் துவக்கப்படும் பொழுது, நடைபெறும் நிலையில் மற்றும் 24.07.2020 அன்று பணிமுடிவுற்ற பின்பு எடுக்கப்பட்ட புகைப்படங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது. புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள 11 சாலைப்பணிகளும் முழுவதும் முழுமையாக முடிக்கப்பட்டு பொதுமக்களின் போக்குவரத்திற்கும் பயன்பாட்டிற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் தற்பொழுதும் இச்சாலைகள் நல்ல முறையில் பயன்பாட்டில் இருந்து வருவது 19.07.2023–ல் அன்று எடுக்கப்பட்ட இத்துடன் இணைக்கப்பட்ட புகைப்படங்களின் வாயிலாக தெரியவருவதால் இச்சாலைகள் அனைத்தும் தரமான முறையில் அமைக்கப்பட்டுள்ளது தெளிவாகிறது. மேற்கண்ட விபரமான பதிலுரை விளக்கத்தினை ஏற்று பார்வையில் கண்ட புகார் மனுவின் மீதான மேல் நடவடிக்கையை முடித்திட வேண்டுமாறு கனிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

**4. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 13.09.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 05.09.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**5. மனுதாரர் 13.09.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:**

"திருப்பூர் மாநகராட்சியில் வார்டு எண் 43 பூச்சக்காடு இரண்டாவது வீதி மற்றும் குறுக்கு வீதிகளில் மற்றும் இதர 9 இடங்களிலும் சேர்த்து மொத்தம் 11 சாலைப் பணிகள் மேற்கொள்ள திட்ட மதிப்பீடு செய்யப்பட்டு, பணி ஆணை வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிட்டு அதற்கான ஒப்பந்தத் தொகையை ஒப்பந்ததாரர்களுக்கு திருப்பூர் மாநகராட்சியால் அளிக்கப்பட்டுவிட்டது. ஆனால் மேற்கண்ட 11 பணிகளுக்கு பதிலாக 3 பணிகள் மட்டுமே முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளை உடனிருந்து கண்காணிக்கும் பொறுப்பில் உள்ள பொறியாளர்கள் பணி நடைபெறும் இடத்திற்கு வருவதே இல்லை. மேலும் சாலைப் பணிகள் முடிந்த பின்பு மூன்றாம் நிறுவனத்தின் மூலம் தர பரிசோதனை செய்து அறிக்கை பெற்றிருக்க வேண்டும். ஆனால் அங்கீகரிக்கப்பட்ட நபர்களிடமிருந்து மேற்கண்ட தரச் சான்று மாநகராட்சியால் பெறப்படவில்லை. திருப்பூர் மாநகராட்சியால் பெறப்பட்ட தரச்சான்று

கோயம்பத்தூர் Institute of Technology, Department of Civil Engineering –லிருந்து அளிக்கப்படவில்லை என அத்துறையின் துறைத்தலைவரே சான்றளித்துள்ளார். இதன் நகலை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேலும் பணிகள் மேற்கொள்ளும்போது கடைபிடிக்கப்பட வேண்டிய நிபந்தனைகளின்படி பணி நடைபெறும் முன்பும், பணி நடைபெற்ற பின்பும் புகைப்படங்கள் எடுக்கப்படவில்லை.

எனவே, மேற்கண்ட பணிகள் குறித்து விசாரித்திடவும், உரிய தரச் சான்றினை தகுதிபெற்ற நபரிடமிருந்து பெற்றிடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 12.6.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**6. திருப்பூர் மாநகராட்சி செயற்பொறியாளர் 13.09.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:**

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள திருப்பூர் மாநகராட்சி வார்டு எண் 49க்கு உட்பட்ட எருக்காடு மற்றும் பூச்சக்காடு 1வது வீதி மற்றும் குறுக்கு வீதி உட்பட 11 வீதிகளில் தார் சாலையை புதுப்பித்திட, 11 பணிகளுக்கு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, அனைத்து பணிகளும் செய்து முடிக்கப்பட்டன. சாலைப் பணிகள் குறித்து முறையாக ஆய்வு செய்து அதனை அளவீட்டுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேற்கண்ட அளவீட்டுப் புத்தகத்தை இம்முறை மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கிறோம். மேலும் இச்சாலைப் பணிகள் துவக்கப்படும்போதும், நடைபெறும் நிலையிலும் மற்றும் 24.7.2020 அன்று பணி முடிவுற்ற பின்னரும் எடுக்கப்பட்ட புகைப்படங்களின் நகல்களையும், மேலும் மேற்கண்ட 11 சாலைகளும் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக பயன்பாட்டில் இருந்து வருவதையும், அவை தற்போதும் நல்ல நிலையில் உள்ளது என்கின்ற விவரத்தையும் தெரிவித்து அதன் புகைப்படங்களையும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் மேற்கண்ட சாலைப் பணிகளுக்கான மூன்றாம் நபர் மேற்கண்ட சாலைப் பணி குறித்து ஆய்வு செய்து அதற்கான தரச்சான்று உள்ளூரில் இயங்கி வரும் கல்லூரியிலிருந்து பெறப்பட்டுள்ளது. மனுதாரர் மேற்கண்ட தரச்சான்று குறித்து சந்தேகம் எழுப்பியுள்ள நிலையில், மேற்கண்ட பணிகளை அரசு பொறியியல் கல்லூரியால் சாலையின் தற்போதைய நிலையை மறு பரிசோதனை செய்து (Re-test) அதற்கான சான்றிதழ் 1 மாத காலத்தில் பெறப்பட்டு, அதன் விவரங்களையும், அதற்கான ஆவணங்களையும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன் என தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மேற்கண்ட 11 பணிகளை மேற்கொண்ட வகையில் ஒப்பந்ததாரர்களுக்கு அளிக்கப்படும் பட்டியல் தொகையில் 5 சதவீதம் மாநகராட்சியால் பிடித்தம் செய்யப்பட்டுள்ளது" என தெரிவித்துள்ளார்.

**7. இந்நேர்வில் மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், திருப்பூர் மாநகராட்சி செயற்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.**

மனுதாரர் தனது மனுவில் திருப்பூர் மாநகராட்சியில் வார்டு எண் 43 பூச்சக்காடு இரண்டாவது வீதி மற்றும் குறுக்கு வீதிகளில் மற்றும் இதர 9 இடங்களிலும் சேர்த்து மொத்தம் 11 சாலைப் பணிகள் மேற்கொள்ள திட்ட மதிப்பீடு செய்யப்பட்டு, பணி ஆணை வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிட்டு அதற்கான ஒப்பந்தத் தொகையை ஒப்பந்ததாரர்களுக்கு திருப்பூர் மாநகராட்சியால் அளிக்கப்பட்டுவிட்டது. ஆனால் மேற்கண்ட 11 பணிகளுக்கு பதிலாக 3 பணிகள் மட்டுமே முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளை உடனிருந்த கண்காணிக்கும் பொறுப்பில் உள்ள பொறியாளர்கள் பணி நடைபெறும் இடத்திற்கு வருவதே இல்லை. மேலும் சாலைப் பணிகள் முடிந்த பின்பு மூன்றாம் நிறுவனத்தின் மூலம் தர பரிசோதனை செய்து அறிக்கை பெற்றிருக்க வேண்டும். ஆனால் அங்கீகரிக்கப்பட்ட நபர்களிடமிருந்து மேற்கண்ட தரச் சான்று மாநகராட்சியால் பெறப்படவில்லை. திருப்பூர் மாநகராட்சியால் பெறப்பட்ட தரச்சான்று கோயம்பத்தூர் Institute of Technology, Department of Civil Engineering –லிருந்து அளிக்கப்படவில்லை என அத்துறையின் துறைத்தலைவரே சான்றளித்துள்ளார். இதன் நகலை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேலும் பணிகள் மேற்கொள்ளும்போது கடைபிடிக்கப்பட வேண்டிய நிபந்தனைகளின்படி பணி நடைபெறும் முன்பும், பணி நடைபெற்ற பின்பும் புகைப்படங்கள் எடுக்கப்படவில்லை. எனவே, மேற்கண்ட பணிகள் குறித்து விசாரித்திடவும், உரிய தரச் சான்றினை தகுதிபெற்ற நபரிடமிருந்து பெற்றிடவும் ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

திருப்பூர் மாநகராட்சி செயற்பொறியாளர் தனது வாக்கு மூலத்தில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள திருப்பூர் மாநகராட்சி வார்டு எண் 49க்கு உட்பட்ட எருக்காடு மற்றும் பூச்சக்காடு 1வது வீதி மற்றும் குறுக்கு வீதி உட்பட 11 வீதிகளில் தார் சாலையை புதுப்பித்திட, 11 பணிகளுக்கு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, அனைத்து பணிகளும் செய்து முடிக்கப்பட்டன. சாலைப் பணிகள் குறித்து முறையாக ஆய்வு செய்து அதனை அளவீட்டுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் இச்சாலைப் பணிகள் துவக்கப்படும்போதும், நடைபெறும் நிலையிலும் மற்றும் 24.7.2020 அன்று பணி முடிவுற்ற பின்னரும் எடுக்கப்பட்ட புகைப்படங்களின் நகல்கள் மற்றும் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக பயன்பாட்டில் இருந்து வருவதையும், அவை தற்போதும் நல்ல நிலையில் உள்ளது என்கின்ற விவரத்தையும் தெரிவித்து அதன் புகைப்படங்களையும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன் என்றும் மேலும் மேற்கண்ட சாலைப் பணிகளுக்கான மூன்றாம் நபர் மேற்கண்ட சாலைப் பணி குறித்து ஆய்வு செய்து அதற்கான தரச்சான்று உள்ளூரில் இயங்கி வரும் கல்லூரியிலிருந்து பெறப்பட்டுள்ளது. மனுதாரர் மேற்கண்ட தரச்சான்று குறித்து சந்தேகம் எழுப்பியுள்ள நிலையில், மேற்கண்ட பணிகளை அரசுப்பொறியியல் கல்லூரியால் சாலையின் தற்போதைய நிலையை மறு பரிசோதனை செய்து (Re-test) அதற்கான சான்றிதழ் 1 மாத காலத்தில் பெறப்பட்டு, அதன் விவரங்களையும், அதற்கான ஆவணங்களையும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேலும் மேற்கண்ட 11 பணிகளை மேற்கொண்ட வகையில் ஒப்பந்ததாரர்களுக்கு அளிக்கப்படும் பட்டியல் தொகையில் 5 சதவீதம் மாநகராட்சியால் பிடித்தம் செய்யப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:—

பிரிவு "7" The Ombudsman shall perform all or any of the following functions namely:-

7 (c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும், மற்றும்

பிரிவு 12. (1) The Ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manner, namely:-

(c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body அடிப்படையிலும் இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

தலைமைப்பொறியாளர், சென்னை அவர்களின் 23.10.2019 நாளிட்டு வழங்கப்பட்ட தொழில்நுட்ப அனுமதி செயல்முறை ஆணையில் விதிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் நிபந்தனைகளை முறையாக திருப்பூர் மாநகராட்சி பின்பற்றவில்லை.

Sl.No.3. The City Engineer. Tiruppur is permitted to test check the above works.

Sl.No..6. The City Engineer, Tiruppur City Municipal Corporation. Tiruppur are responsible for any violation/deviations/violation of procedures in the work.

Sl. No.7. All the construction materials including aggregate. Bitumen, steel rods, cement etc., for the above works should be tested in the Government Engineering College/Regional Testing Laboratory Government owned/approved lab to ensure the quality and strength and test certificate should be obtained.

Sl.No.8. Completion plan and completion report approval should be obtained from the Chief Engineer. O/o. CMA, Chennai-28 before making final bill.

இந்நேர்வில் குறிப்பிடப்பட்டுள்ள 11 பணிகளுக்கும் ஒப்பந்ததாரர்களுக்கு இறுதி பட்டியல்தொகை அளிக்கப்படும் முன்னர் முடிக்கப்பட்ட திட்டம் மற்றும் பணிகளை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக தலைமைப்பொறியாளரின் அனுமதி பெற்ற பின்பே வழங்கப்பட்டிருக்க வேண்டும். இந்த விதிமுறைகள் தெரிந்தும் திருப்பூர் மாநகராட்சி தலைமைப்பொறியாளர், செயற்பொறியாளர்கள், இளநிலைப்பொறியாளர்கள் எதையும் கண்டுகொள்ளாமல் விதிகள் மீறி செயல்பட்டுள்ளது தெள்ளத்தெளிவாக தெரிகிறது. இச்செயல் மிகவும் வன்மையாக கண்டிக்கத்தக்கது. இதில் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க திருப்பூர் மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார். வழங்கப்பட்ட தொழில் நுட்ப அனுமதிக்கு மாறாகவும் (வரிசை எண்.6,7, 8) ஒப்பந்தத்திற்கு மாறாகவும் செயல்பட்டுள்ளனர் என்பது வெளிப்படையாக தெரியவருவதால் மனுதாரர் தெரிவித்த புகாரில் உண்மைத்தன்மை உள்ளது என்று ஏன் கருதக்கூடாது ?

எனவே மனுதாரால் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்ட முறைகேடுகள் குறித்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக தலைமைப் பொறியாளர் அவர்களைக் கொண்டு கள ஆய்வு மேற்கொண்டு அந்த அறிக்கையினை நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு சமர்ப்பிக்கவும் மேலும் அவ்வறிக்கையில் ஏதேனும் முறைகேடு நடைபெற்றதாக குறிப்பிடப்படுமேயானால் அந்த முறைகேட்டிற்கு காரணமான சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடரவும் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் அவ்வாறே ஆணையிடுகிறது.

இந்நேர்வில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் குறித்த அனைத்து பட்டியல் விவரத்தினை ஆய்வு செய்து விரிவான அறிக்கையினை திருப்பூர் மாநகராட்சி ஆணையருக்கு அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் அறிக்கையில் முறைகேடுகள் ஏதும் கண்டறியப்பட்டால் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு திருப்பூர் மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

மேலும் திருப்பூர் மாநகராட்சி செயற்பொறியாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு மூன்றாம் நிறுவனத்தின் மூலம் (Third Party Inspection) பெறப்பட்ட அறிக்கையினை 1 மாத காலத்திற்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைக்குமாறு திருப்பூர் மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

2023-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.V.P. ரவிச்சந்திரன்
   எண்.4சி, ஆகாஷ் இல்லம்,
   பாளையக்காடு, திருப்பூர்.

2. ஆணையர்,
   திருப்பூர் மாநகராட்சி, திருப்பூர்.

3. இயக்குநர்,
   உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை,
   571, அண்ணாசாலை, நந்தனம்,
   சென்னை – 600 035.

4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

5. இணை இயக்குநர் /
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்